நல்ல பல பக்திப் பாடல்களையெல்லாம் பாடியிருக்கிறார்கள். பணம் இல்லாமல் ஆஸ்தான வித்துவான்களாக இருக்க முன் வருவார்கள் என்றால் அப்படி யார் யார் வருகிறார்கள் என்று அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால் அதுபற்றி அரசு ஆலோசிக்கும். (ஆரவாரம்).

அறநிலையத் துறையினரால் வெளியிடப்படும் மாத இதழ்

*243 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையத் துறையினரால் மாதப் பத்திரிகை ஏதேனும் நடத்தப் படுகிறதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) 1958-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் வெளியிடப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கைகள் அளித்தல்.

(அ) மதுரைக்கு அருகில் ஏற்பட்ட விமான விபத்து குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவை '82-வது விதியின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் நடை பெற்ற விமான விபத்துபற்றி நேற்று மேலவையிலே ஒரு அறிக்கையை அளித்து இருக்கிறேன். இங்கே அப்படி ஒரு அறிக்கையை வைக்க வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கமணி அவர்களும், ஹாண்டே அவர் களும் தெரிவித்தார்கள். மேலவையிலே வைக்கப்பட்ட அறிக்கையை ஒட்டி, மேலும் பல விவரங்களை இங்கே அளிக்க விரும்புகிறேன்.

நேற்று காலையில் 11-55-க்கு திருவனந்தபுரத்தை விட்டுப் புறப்பட்ட இந்தி யன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று மதுரைக்கு பிற்பகல் 12.30-க்கு வந்து சேர வேண்டியது, பிற்பகல் 12-26-க்கு கன்ட்ரோலை விட்டுப் போய்விட்டது என்ற செய்தி பிற்பகல் 1-30 மணி அளவில் எனக்கு நமது போலீஸ் உயர்தர அதிகாரி கள் தெரிவித்தார்கள். இதனைத் தேடி இந்தியன் ஏர்லைன்ஸ் ஹெலிகாப்டர்கள் இரண்டு அனுப்பட்டுள்ளன என்றும் தெரிய வந்தது. பின்னர் மாலை 6 மணி அளவில் அந்த விமானம் மதுரை மாவட்டம், சின்னமனூருக்கு 43 கிலோ மீட்டருக்கு தென் மேற்கிலுள்ள மேகமலைத் தேயிலைத் தோட்டத்தில் நொறுங்கி விழுந்ததாகச் செய்தி கிடைத்து, அதை உடனடியாக நான் மேலவையில் தெரி வித்தேன். அந்த விமானத்தில் பிரயாணிகள் 27 பேரும், இரு விமான ஓட்டி களும், இரு பணிப் பெண்களும் ஆக 31 பேர் இருந்ததாகத் தெரிந்தது. உடனடியாக மதுரை மாவட்ட ஆட்சியாளர், காவல் துறை பெரிய அதிகாரிகள் அந்த இடத்திற்கு விரைந்து அனுப்பப்பட்டனர். மருத்துவர்களும் அனுப் பப்பட்டனர்.

பின்னர் வந்த செய்தியின்படி அந்தப் பிரயாணிகளில் 11 பேர் அருகாமையிலுள்ள தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்த "கைவேவிஸ்" மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றும், அவர்களில் ஒருவருடைய நிலை தான் கவலைக்கிடம் என்றும், மற்றவர்கள் பிழைத்துக் கொள்வார்கள் என்ற செய்தியும், அவர்களைக் கவனிக்க மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனையிலிருந்து எலும்பு சம்பந்தப்பட்ட மருத்துவ நிபுணர் அனுப்பப் பட்டுள்ளார் என்றும், மற்ற 20 பேரும் (விமான ஓட்டிகள், பணிப் பெண்கள் உள்பட) இறந்து விட்டதாகவும் தெரிகிறது. இது சம்பந்தமாக, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியவை எடுக்கப்பட்டு வருகின்றன. இறந்தவர்களுடைய உடல்கள் பிரேத பரிசோதனைக்காக மதுரைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்த விபத்திற்குக் காரணம் என்ன என்று காயம் அடைந்த பிரயாணிகளைக் கேட்டதில், பறந்து கொண்டு வந்த விமானம் தானாகவே தனது உயரத்தை படிப்படியாக இழந்து, பிறகு மரங்களிடையே மோதல் ஏற்பட்டு, அதன் இரண்டு இறக்கைகளுக்கும் சேதம் அடைந்து, பிறகு கீழே விழுந்து நொறுங்கியதாகத் தெரிகிறது. சரியான காரணம் முழு விசாரணைக்குப் பின்னர் தான் தெரியும்.

இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) நாட்டின் நெருக்கடி நிலையைச் சமாளிக்க நிதி திரட்டும் முயற்சிகள் குறித்து அரசு எடுத்துள்ள முடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப்பேரவை 82-வது விதியின் கீழ் மேலும் ஒரு அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

மாணபுமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இன்று நமது நாட்டை எதிர் நோக்கி நிற்கும் நெருக்கடி நிலையில் நாம் எடுக்க வேண்டிய சில நடவடிக்கைகளுக்கான அமைச்சரவையின் முடிவுகளை இம் மன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் நம் மீது ஏற்றப்பட்டுள்ள சுமையை ஏற்க, நாடு முழுவதும் ஒருங்கிணைந்து உதவி செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு பல்வேறு மாநிலங்களிலும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும் என மத்திய அரசு நமக்கு வேண்டுகோள் விடுத்துப் பல்வேறு யோசனைகளைக் கூறியது. அவை, திரைப்படக் கட்டண உயர்வு, குதிரைப் பந்தய நுழைவுக் கட்டண உயர்வு, குதிரைப் பந்தய வரி உயர்வு, வாகன வரி உயர்வு, பரிசுச் சீட்டின் மீது மேல் வரி, பேருந்துக் கட்டண உயர்வு முதலியவையாகும்.

இன்றுள்ள சூழ்நிலையில் மத்திய அரசிடமிருந்து நமக்குத் திட்டத்திற்காகக் கிட்ட இருக்கும் உதவித் தொகை குறைந்து விடக்கூடுமோ என்ற ஐயமும், அதன் விளைவாக நமது மாநிலத்தின் குறைந்த அளவுத் திட்டப் பணியும் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளன. இந்நிலையில், ஏற்றதொரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நம்மாலான கூடுதல் நிதிவசதிகளை இயன்ற அளவு நாமே திரட்டும் முயற்சியில் ஈடுபட வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. புறத்தே இருக்கின்ற பகைவர்களுடன் போரிடும் நேரத்தில், நாட்டின்